<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>
<u>OS No: 06/2024</u>

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ம் நாள் Pw2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | அருண்குமார் |
| த.க.பெயர் | வடிவேல் |
| கிராமம் | வாய்க்கால்புதூர் |
| மாவட்டம் | ஈரோடு |
| **வயது** | 38 |

**<u>வா.சா. 2 நாள்</u>** 09.09.2025

**<u>முதல் விசாரணை:</u>** (சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை செய்யப்படுகிறார்)

நான் வாதி தரப்பு சாட்சி. என் தரப்பு முதல் விசாரணைக்காக நிருபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும்.

<u>குறுக்கு விசாரணை ( பிரதிவாதி தரப்பில்)</u>

எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை என்றால் சரி. வாதி கேட்டுக் கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. சாட்சி நீங்கலாக நான், வாதி, பிரதிவாதி ஆகியோர் பாண்டியம்பாளையம் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரி. வழக்கில் சாட்சி பழனிசாமி சாட்சியம் அளிக்க மறுத்துவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியின் வீட்டின் சுற்றுச்சுவற்றை நாங்களும் ஊர் காரர்களும் இடித்தது முதல் பிரதிவாதிக்கும் எங்களுக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். என் மீது மற்றும் பாண்டியம்பாளைய கிராத்தை சேர்ந்தவர்களுக்கும் திங்களூர் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் அடிப்படையில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கு தொடர்பான முதல் தகவல் அறிக்கை தான் என்னிடம் காண்பிக்கப்படுவது. அது **பிசாஆ 2.** பிசாஆ 2 ன்

அடிப்படையில் குற்ற இறுதியறிக்கை போலிசாரால் தாக்கல் செய்யப்பட்டு, பெருந்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி சம்பவத்திற்கு பின் எனக்கும் பிரதிவாதிக்கும் நேரடியான தொடர்போ, பேச்சு வார்த்தையோ இல்லை என்றால சரிதான். நான், வாதி மற்றும் சாட்சி ஆகியோர் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சாட்சி முதலில் சரி என்றும் பின்னர் சாட்சி பழனிசாமி எந்த சமூகத்தை சேர்ந்தவர் என்று தனக்கு தெரியாது என்று கூறுகிறார். சாட்சியை நான் பார்த்ததில்லை, நான் அவரை பற்றி விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். 12.04.2021 ல் கடனுறுதி சீட்டு எழுதிய தேதியில் தான் நான் சாட்சியை பார்த்தேன். என் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக பிசாஆ 2 தேதிக்கு பின்னிட்டு தான் கடனுறுதி சீட்டு என்னால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் குடும்பத்தார் பற்றிய முழு விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி உள்ளூரில் கொல்லம்பட்டறை வைத்து நல்ல முறையில் தொழில் செய்து வருகிறார் என்றால் சரிதான். கடனுறுதி சீட்டில் நான் எழுதியதற்கு பின்னிட்டு அதில் எனது கையொப்பத்திற்கு கீழ் தேதி குறிப்பிடவில்லை என்றால சரிதான். கடனுறுதி சீட்டில் உள்ள ரேகை யாருடைய ரேகை என்று எழுதப்படவில்லை என்றால் சரிதான். நான் வாசாஆ 1 க்கு முன்பாக கடனுறுதி சீட்டு எழுதிய பழக்கம் இல்லை என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும் சுமார் 10 ஆண்டுகளாக பழக்கம். எனக்கும் வாதிக்கும் பாண்டியம்பாளையம் கிராமத்தில் ஒரே சர்வே எண்ணில் சொத்துக்கள் இருந்தது என்றால் சரியல்ல. பாண்டியம்பாளையம் கிராமத்தில் ரீச எண் 189/8 ல் எனக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். நான் ஈரோடு கொல்லம்பாளையத்தை சேர்ந்த சிஎஸ் பழனிசாமி மகன் சந்தோஷ்னுகுமாருக்கு அந்த சொத்தை விற்பனை செய்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கு வாதி முன்நின்று விலை பேசி வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல, அந்த ஆவணத்தில் யார் சாட்சி போட்டார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் வேண்டுமென்றே பொய் சொல்கிறேன் என்றும், அந்த ஆவணத்தில் வாதியும் கிரயம் வாங்கியவரின் தாயார் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் கிரய ஆவணம் நான் சந்தோஷ்குமாருக்கு ஏற்படுத்திக் கொடுத்த கிரய ஆவணம் என்றால் சரி. அது

**பிசாஆ 3.** சந்தோஷ்குமாரின் தந்தை சி எஸ் பழனிசாமியும் வாதியும் உறவினர் என்றால் சரிதான். அதனால் தான் வாதி அந்த கிரய ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. கடனுறுதி சீட்டில் ஏற்கனவே வருவாய் முத்திரை ஒட்டப்பட்டிருந்த ஆவணத்தில் நான் பூர்த்தி செய்தேன். கடனுறுதி சீட்டு எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் பாண்டியம்பாளையத்தில் உள்ள சிவசுப்பிரமணியத்தின் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. நான் வாதியின் வீட்டிற்கு மாலை சுமார் 4 மணி அளவில் சென்றேன், நான் செல்வதற்கு முன்பே வாதி, பிரதிவாதி மற்றும் சாட்சிகள் அங்கிருந்தனர். எனக்கும் பிரதிவாதிக்கும் பேச்சு வார்த்தை இல்லாத நிலையில் நான் ஆவணத்தை எழுதுவதற்கு மறுத்தேனா என்றால் நான் மறுக்கவில்லை. கடனுறுதி சீட்டை நான் எழுதியது மட்டும் தான், நான் கடனுறுதி சீட்டில் எழுதியதும், சாட்சியும் என கையொப்பம் செய்யவில்லை. வாதி,பிரதவாதிக்கும் இடையே உள்ள பண பரிவர்தனை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரி. என்னை எழுதிக் கொடுக்கச் சொன்னதால் நான் கடனுறுதி சீட்டை எழுதினேன் என்றால் சரி. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் நான் , சாட்சி ஆகியோர் வாதிகள் முன்னிலையில் பிரதிவாதி கையொப்பம் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடனுறுதி சீட்டு எழுதியபோது பிரதிவாதி அங்கில்லை என்றும், சாட்சியும் அங்கில்லை என்றும், வாதியும் பிரதிவாதியும்சொல்லி நான் கடனுறுதி சீட்டை எழுதியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. வாதிக்கு தொகை எவ்வாறு வந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. பணம் கொடுத்தது தெரியும், ஆனால் அந்த பணம் வாதிக்கு எவ்வாறு வந்தது என்று தெரியாது. பணம்கொடுத்தது எனக்கு தெரியும் என நான் பிரதிவாதியின் மீது உள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் மற்றும் எனது ஊர் காரர்கள் பிரதவாதியின் வீட்டின் சுற்றுச் சுவற்றை இடித்து மற்றும் பிரதிவாதியை நிர்பந்தபடுத்த நான், சிஎஸ் பழனிசாமியின் மகன் சந்தோஷ்குமார் ஆகியோர் கூட்டு சேர்ந்து தாவா கடனுறுதி சீட்டை பொய்யாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. சி எஸ் பழனிசாமி தற்போது உயிருடன் இல்லை. அவர் கொலை செய்யப்பட்டதாக அவரது மகன் மற்றும்

மனைவி மீது வழக்கு உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி சிஎஸ் பழனிசாமியிடம் சொத்தை இழந்து பல்வேறு வழக்குகள் தொடர்ந்து விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதியிடம் உள்ளூரில் எங்கள் சமூகத்தை சார்ந்த யாரும் தொடர்பில் இல்லை என்றால சரியல்ல. 12.04.2021 தேதியில் வாதியிடம் பிரதிவாதி கடன் பெற்றுக் கொண்டு கடனுறுதி சீட்டை என் முன்னிலையில் எழுதி கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.09.09 15:11:25 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS